# இலங்கை புகையிரத சேவைகள்

# பெறுகை அறிவித்தல்

## S10 COACHES உடனடி திருத்தவேலைகள் மற்றும் பெயின்டிங் இற்கான பெறுகை – 30 எண்ணிக்கை

**பெறுகை இல. SRS/F.7894**

01. இலங்கை புகையிரத சேவைக்கு S10 COACHES உடனடி திருத்தவேலைகள் மற்றும் பெயின்டிங் இற்கான உள்நாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் திணைக்களக் கொள்வனவுக் குழு (மேஜர்) தவிசாளர் பெற்றுக்கொள்வார்.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மூலம் (NCB) விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

03. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2023.10.31ஆம் திகதி முதல் 2023.11.23ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04 **பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**

| | | |
|---|---|---|
| **தொலைபேசி** | : | 94(11)2438078 அல்லது 94(11)2436818 |
| **தொலைநகல்** | : | 94(11)2432044 |
| **மின்னஞ்சல்** | : | dgmp@railways.gov.lk, pot1@railway.gov.lk |
| **இணையதளம்** | : | www.railway.gov.lk |

05. விலைமனுதாரர் கனமான இரும்பு கட்டமைப்புகள் மற்றும் பயணிகள் வாகன உட்புற கட்டுமானங்களை மேற்கொள்ளும் இயலுமை மற்றும் கொள்ளளவு உள்ளதென்பதற்கான ஆவண ரீதியான சாட்சியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 32,000.00 ரூபாவை மட்டும் செலுத்துவதன் பேரில் 2023.10.31ஆம் திகதி முதல் 2023.11.23ஆம் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம், பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) எனும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

07. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 1,800,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

08. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023.11.05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இரத்மலானை, பிரதம இயந்திரவியல் பொறியியலாளர் உப திணைக்களத்தில் இடம்பெறும்.

09. விலைமனுக்கள் 2023.11.24ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர் திணைக்கள பெறுகைக்குழு (மேஜர்),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

**Ref. No. SRS/F.7894**